# திருவாய் மொழி ஆறும் பத்து

## முதல் திருமொழி

3343:##
வைகல் பூங்கழிவாய்* வந்து மேயும் குருகினங்காள்*
செய்கொள் செந்நெலுயர்* திருவண் வண்டுருறையும்*
கைகொள் சக்கரத்து* என்கனிவாய் பெருமானைக் கண்டு*
கைகள் கூப்பிச் சொல்லீர்* வினையாட்டியேன் காதன்மையே*.(2) 6.1.1

3344:
காதல் மென் பெடையோடு* உடன் மேயும் கருநாராய்*
வேத வேள்வி ஒலிமுழங்கும்* தண் திருவண் வண்டூர்*
நாதன் ஞாலமெல்லாம் உண்ட* நம்பெருமானைக் கண்டு*
பாதம் கைதொழுது பணியீர்* அடியேன் திறமே*. 6.1.2

3345:
திறங்களாகி எங்கும்* செய்களூடுழல் புள்ளினங்காள்*
சிறந்த செல்வம் மல்கு* திருவண் வண்டுருறையும்*
கறங்கு சக்கரக்கைக்* கனிவாய்ப் பெருமானைக் கண்டு*
இறங்கி நீர்தொழுது பணியீர்* அடியேன் இடரே*. 6.1.3

3346:
இடரில் போகம் மூழ்கி* இணைந்தாடும் மடவன்னங்காள்!*
விடலில் வேதவொலி முழங்கும்* தண் திருவண் வண்டூர்*
கடலமேனிப் பிரான்* கண்ணனை நெடுமாலைக் கண்டு*
உடலம் நைந்து ஒருத்தி* உருகும் என்று உணர்த்துமினே*. 6.1.4

3347:
உணர்த்தலூடல் உணர்ந்து* உடன் மேயும் மடவன்னங்காள்*
திணர்த்த வண்டல்கள் மேல்* சங்கு சேரும் திருவண்வண்டூர்*
புணர்த்த பூந்தண் துழாய்முடி* நம்பெருமானைக் கண்டு*
புணர்த்த கையினராய்* அடியேனுக்கும் போற்றுமினே*. 6.1.5

3348:
போற்றியான் இரந்தேன்* புன்னை மேலுறை பூங்குயில்காள்*
சேற்றில் வாளை துள்ளும்* திருவண் வண்டுருறையும்*
ஆற்றல் ஆழியங்கை* அமரர் பெருமானைக் கண்டு*
மாற்றம் கொண்டருளீர்* மையல் தீர்வது ஒரு வண்ணமே*. 6.1.6

3349:
ஒருவண்ணம் சென்று புக்கு* எனக்கு ஒன்றுரை ஒண் கிளியே*
செருவொண் பூம்பொழில் சூழ்* செக்கர் வேலை திருவண்வண்டூர்*
கருவண்ணம் செய்யவாய்* செய்யகண் செய்யகை செய்யகால்*
செருவொண் சக்கரம் சங்கு* அடையாளம் திருந்தக் கண்டே*. 6.1.7

3350:
திருந்தக் கண்டு எனக்கொன்று உரையாய்* ஒண்சிறு பூவாய்*
செருந்தி ஞாழல் மகிழ்* புன்னைசூழ் தண் திருவண்வண்டூர்*
பெருந்தண் தாமரைக் கண்* பெருநீள்முடி நால் தடந்தோள்*
கருந்திண் மாமுகில் போல்* திருமேனி அடிகளையே*. 6.1.8

3351:
அடிகள் கை தொழுது* அலர்மேல் அசையும் அன்னங்காள்*
விடிவை சங்கொலிக்கும்* திருவண் வண்டூர் உறையும்*
கடிய மாயன் தன்னைக்* கண்ணனை நெடுமாலைக் கண்டு*
கொடிய வல்வினையேன்* திறம் கூறுமின் வேறுகொண்டே*. 6.1.9

3352:
வேறு கொண்டு உம்மையான் இரந்தேன்* வெறி வண்டினங்காள்*
தேறு நீர்ப் பம்பை* வடபாலைத் திருவண் வண்டூர்*
மாறில் போர் அரக்கன்* மதிள் நீறெழச் செற்றுகந்த*
ஏறு சேவகனூர்க்கு * என்னையும் உளள் என்மின்களே*. 6.1.10

3353:##
மின்கொள் சேர்புரிநூல் குறளாய்* அகல் ஞாலம் கொண்ட*
வன்கள்வன் அடிமேல்* குருகூர்ச் சடகோபன் சொன்ன*
பண்கொள் ஆயிரத்துள் இவை பத்தும்* திருவண்வண்டூர்க்கு*
இன்கொள் பாடல் வல்லார்* மதனர் மின்னிடை அவர்க்கே*.(2) 6.1.11

இரண்டாம் திருமொழி

3354:##
மின்னிடை மடவார்கள் நின்னருள் சூடுவார்* முன்பு நானதஞ்சுவன்*
மன்னுடை இலங்கை* அரண்காய்ந்த மாயவனே*
உன்னுடைய சுண்டாயம் நானறிவன்* இனி அது கொண்டு செய்வதென்?*
என்னுடைய பந்தும் கழலும்* தந்து போகு நம்பீ!*.(2) 6.2.1

3355:
போகு நம்பீ! உன்தாமரை புரைகண்ணிணையும்* செவ்வாய் முறுவலும்*
ஆகுலங்கள் செய்ய* அழிதற்கே நோற்றேமேயாம்?*
தோகை மாமயிலார்கள் நின்னருள் சூடுவார்* செவியோசை வைத்தெழ*
ஆகள் போக விட்டு* குழலூது போயிருந்தே*. 6.2.2

3356:
போயிருந்து நின் புள்ளுவம் அறியாது* அவர்க்கு உரை நம்பி!* நின்செய்ய-
வாயிருங் கனியுங் கண்களும்* விபரீதம் இந்நாள்*
வேயிருந்தடந்தோளினார்* இத்திருவருள் பெறுவார்யவர் கொல்*
மாயிருங் கடலைக் கடைந்த* பெருமானாலே?*. 6.2.3

3357:
ஆலின் ஈளிலை ஏழுலகமுண்டு* அன்று நீ கிடந்தாய்* உன் மாயங்கள்-
மேலை வானவரும் அறியார்* இனி எம் பரமே?*
வேலினேர்த் தடங்கண்ணினார்* விளையாடு சூழலைச் சூழவே நின்று*
காலி மேய்க்க வல்லாய்!* எம்மை நீ கழறேலே*. 6.2.4

3358:
கழறேல் நம்பீ!* உன் கை தவம் மண்ணும் விண்ணும் நன்கறியும்* திண்சக்கர-
நிழறு தொல்படையாய்!* உனக்கு ஒன்று உணர்த்துவன் நான்*
மழறு தேன்மொழியார்கள் நின்னருள்சூடுவார் மனம் வாடி நிற்க* எம்-
குழறு பூவையொடும்* கிளியோடும் குழகேலே*. 6.2.5

3359:
குழகி எங்கள் குழமணன் கொண்டு* கோயின்மை செய்து கன்மம் ஒன்றில்லை*
பழகியாம் இருப்போம்* பரமே இத்திருவருள்கள்?*

அழகியார் இவ்வுலக மூன்றுக்கும்* தேவிதமை தகுவார் பலருளர்*
கழக மேறேல் நம்பீ!* உனக்கும் இளைதே கன்மமே*. 6.2.6

3360:
கன்ம மன்று எங்கள் கையில் பாவைபறிப்பது* கடல்ஞாலம் உண்டிட்ட*
நின்மலா! நெடியாய்!* உனக்கேலும் பிழைபிழையே*
வன்மமே சொல்லி எம்மை நீ விளையாடுதி* அதுகேட்கில் என்னைமார்*
தன்ம பாவமென்னுர்* ஒரு நான்று தடி பிணக்கே*. 6.2.7

3361:
பிணக்கி யாவையும் யாவரும்* பிழையாமல் பேதித்தும் பேதியாதது ஓர்*
கணக்கில் கீர்த்தி வெள்ளக்* கதிர்ஞான மூர்த்தியினுய்,
இணக்கி எம்மை எந்தோழிமார்* விளையாடப் போதுமின் என்ன போந்தோமை*
உணக்கி நீ வளைத்தால்* என் சொல்லார் உகவாதவரே?*. 6.2.8

3362:
உகவையால் நெஞ்சம் உள்ளுருகி* உன்தாமரைத் தடங்கண் விழிகளின்*
அகவலைப் படுப்பான்* அழித்தாய் உன் திருவடியால்*
தகவு செய்திலை எங்கள் சிற்றிலும்* யாமடு சிறுசோறும் கண்டு* நின்-
முகவொளி திகழ* முறுவல் செய்து நின்றிலையே*. 6.2.9

3363:
நின்றிலங்கு முடியினுய்!* இருபத்தோர் கால் அரசு களை கட்ட*
வென்றி நீள்மழுவா!* வியன்ஞாலம் முன்படைத்தாய்!*
இன்று இவ்வாயர் குலத்தை வீடுய்யத் தோன்றிய* கருமாணிக்கச் சுடர்*
நின் தன்னுல் நலிவே படுவோம் என்றும் *ஆய்ச்சியோமே*. 6.2.10

3364:##
ஆய்ச்சியாகிய அன்னையால்* அன்று வெண்ணெய் வார்த்தையுள்* சீற்ற முண்டழு-
கூத்த அப்பன் தன்னைக்* குருகூர்ச் சடகோபன்*
ஏத்திய தமிழ் மாலை* ஆயிரத்துள் இவையுமோர் பத்து இசையோடும்*
நாத்தன்னுல் நவில உரைப்பார்க்கு* இல்லை நல்குரவே*.(2) 6.2.11

மூன்றும் திருமொழி

3365:##
நல்குரவும் செல்வும்* நரகும் சுவர்க்கமுமாய்*
வெல்பகையும் நட்பும்* விடமும் அமுதமுமாய்*
பல்வகையும் பரந்த* பெருமான் என்னை ஆள்வானை*
செல்வம் மல்குகுடி* திரு விண்ணகர் கண்டேனே*.(2)6.3.1

3366:
கண்ட இன்பம் துன்பம்* கலக்கங்களும் தேற்றமுமாய்*
தண்டமும் தண்மையும்* தழலும் நிழலுமாய்*
கண்டு கோடற்கரிய* பெருமான் என்னை ஆள்வானூர்*
தென் திரைப் புனல்சூழ்* திருவிண்ணகர் நன்னகரே*. 6.3.2

3367:
நகரமும் நாடுகளும்* ஞானமும் மூடமுமாய்*
நிகரில்சூழ் சுடராய் இருளாய்* நிலனுய் விசும்பாய்*
சிகர மாடங்கள் சூழ்* திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரான்*
புகர்கொள் கீர்த்தியல்லால் இல்லை* யாவர்க்கும் புண்ணியமே*. 6.3.3

3368:
புண்ணியம் பாவம்* புணர்ச்சி பிரிவு என்றிவையாய்*
எண்ணமாய் மறப்பாய்* உண்மையாய் இன்மையாய் அல்லனுய்*
திண்ணமாடங்கள் சூழ்* திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரான்*
கண்ணனின் அருளே* கண்டு கொண்மின்கள் கைதவமே*. 6.3.4

3369:
கை தவம் செம்மை* கருமை வெளுமையுமாய்*
மெய்பொய் இளமை* முதுமை புதுமை பழமையுமாய்*
செய்ததிண் மதிள்சூழ்* திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரான்*
பெய்தகாவு கண்டீர்* பெருந்தேவுடை மூவுலகே*. 6.3.5

3370:
மூவுலகங்களுமாய்* அல்லனுய் உகப்பாய் முனிவாய்*
பூவில் வாழ் மகளாய்* தவ்வையாய்ப் புகழாய் பழியாய்*
தேவர் மேவித்தொழும்* திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரான்*
பாவியேன் மனத்தே* உறைகின்ற பரஞ்சுடரே*. 6.3.6

3371:
பரஞ்சுடர் உடம்பாய்* அழுக்கு பதித்த உடம்பாய்*
கரந்தும் தோன்றியும் நின்றும்* கை தவங்கள் செய்யும்* விண்ணோர்-
சிரங்களால் வணங்கும்* திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான்*
வரங்கொள் பாதமல்லால் இல்லை* யாவர்க்கும் வன்சரணே*. 6.3.7

3372:
வன்சரண் சுரர்க்காய்* அசுரர்க்கு வெங்கூற்றமுமாய்*
தன்சரண் நிழற்கீழ்* உலகம் வைத்தும் வையாதும்*
தென்சரண் திசைக்குத்* திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான்*
என்சரண் என் கண்ணன்* என்னையாளுடை என்னப்பனே* 6.3.8

3373:##
என்னப்பன் எனக்காய் இகுளாய்* என்னைப் பெற்றவளாய்*
பொன்னப்பன் மணியப்பன்* முத்தப்பன் என் அப்பனுமாய்*
மின்னப் பொன் மதிள்சூழ்* திரு விண்ணகர்ச் சேர்ந்த அப்பன்*
தன்னொப்பார் இல்லப்பன்* தந்தனன் தனதாள் நிழலே*.(2) 6.3.9

3374:
நிழல்வெயில் சிறுமை பெருமை* குறுமை நெடுமையுமாய்*
சுழல்வன நிற்பன* மற்றுமாய் அவை அல்லனுமாய்*
மழலை வாழ் வண்டுவாழ்* திருவிண்ணகர் மன்னுபிரான்*
கழல்கள் அன்றி* மற்றோர் களைகணிலம் காண்மின்களே*. 6.3.10

3375:##
காண்மின்கள் உலகீர்! என்று* கண்முகப்பே நிமிர்ந்த*
தாளிணையன் தன்னைக்* குருகூர்ச் சடகோபன் சொன்ன*
ஆணை ஆயிரத்துத் * திருவிண்ணகர்ப் பத்தும் வல்லார்*
கோணையின்றி விண்ணோர்க்கு* என்றுமாவர் குரவர்களே*.(2) 6.3.11

நான்காம் திருமொழி

3376:##
குரவை யாய்ச்சியரோடு கோத்ததும்* குன்றமொன் றேந்தியதும்*
உரவுநீர்ப் பொய்கை நாகம் காய்ந்ததும்* உட்பட மற்றும்பல,*

அரவில் பள்ளிப் பிரான்தன்* மாய வினைகளையே அலற்றி,*
இரவும் நன்பகலும் தவிர்கிலம்* என்ன குறை நமக்கே? 6.4.1

3377:
கேயத் தீங்குழல் ஊதிற்றும் நிரைமேய்த்ததும்* கெண்டை ஒண்கண்*
வாசப் பூங்குழல் பின்னை தோள்கள் *மணந்ததும் மற்றும்பல,*
மாயக் கோலப் பிரான்தன்* செய்கை நினைந்து மனம்குழைந்து,*
நேயத்தோடு கழிந்த போது* எனக்கு எவ்வுலகம் நிகரே? 6.4.2

3378:
நிகரில் மல்லரைச் செற்றதும் *நிரை மேய்த்ததும் நீள் நெடுங்கை,*
சிகர மாகளிறட்டதும்* இவை போல்வனவும் பிறவும்,*
புகர் கொள் சோதிப் பிரான்தன்* செய்கை நினைந்து புலம்பி என்றும்*
நுகர வைகல் வைகப்பெற்றேன்* எனக்கு என் இனி நோவதுவே? 6.4.3

3379:
நோவ ஆய்ச்சி உரலோடார்க்க* இரங்கிற்றும் வஞ்சப்பெண்ணை*,
சாவப் பாலுண்டதும்* ஊர் சகடம் இறச் சாடியதும்,*
தேவக் கோல பிரான்தன்* செய்கை நினைந்து மனம்குழைந்து,*
மேவக் காலங்கள் கூடினேன்* எனக்கு என் இனி வேண்டுவதே? 6.4.4

3380:
வேண்டி தேவரிரக்க வந்து பிறந்ததும்* வீங்கிருள்வாய்–
பூண்டு* அன்று அன்னை புலம்பப் போய்* அங்கு ஓராய்க்குலம் புக்கதும்,*
காண்ட லின்றி வளர்ந்து* கஞ்சனைத் துஞ்ச வஞ்சம் செய்ததும்,*
ஈண்டு நான் அலற்றப் பெற்றேன்* எனக்கு என்ன இகலுளதே? 6.4.5

3381:
இகல்கொள் புள்ளை பிளந்ததும்* இமில் ஏறுகள் செற்றதுவும்,*
உயர்கொள் சோலைக் குருந்தொசித்ததும்* உட்பட மற்றும்பல,*
அகல்கொள் வையம் அளந்த மாயன்* என்னப்பன் தன் மாயங்களே,*
பகலிராப் பரவப் பெற்றேன்* எனக்கென்ன மனப்பரிப்பே? 6.4.6

3382:
மனப்பரிபோடு அழுக்கு* மானிட சாதியில் தான்பிறந்து,*
தனக்கு வேண்டுருக்கொண்டு* தான் தன சீற்றத்தினை முடிக்கும்,*
புனத்துழாய் முடிமாலை மார்பன்* என்னப்பன்தன் மாயங்களே,*
நினைக்கும் நெஞ்சுடையேன்* எனக்கினி யார் நிகர் நீணிலத்தே? 6.4.7

3383:
நீணிலத் தொடுவான் வியப்ப* நிறைபெரும் போர்கள் செய்து,*
வாணன் ஆயிரம் தோள் துணித்ததும்* உட்பட மற்றும்பல,*
மாணியாய் நிலம் கொண்ட மாயன்* என்னப்பன்தன் மாயங்களே,*
காணும் நெஞ்சுடையேன்* எனக்கு இனியென்ன கலக்க முண்டே? 6.4.8

3384:
கலக்க ஏழ்கடல் ஏழ்*மலை உலகு ஏழும் கழியக்கடாய்,*
உலக்கத் தேர் கொடு சென்ற மாயமும்* உட்பட மற்றும்பல,*
வலக்கை ஆழி இடக்கை சங்கம்* இவையுடை மால்வண்ணனை,*
மலக்கு நாவுடையேற்கு* மாறுளதோ இம் மண்ணின் மிசையே? 6.4.9

3385:
மண்மிசைப் பெரும்பாரம் நீங்க* ஓர்பாரத மாபெரும்போர் பண்ணி,*
மாயங்கள் செய்து, சேனையைப் பாழ்பட* நூற்றிட்டுப்போய்,*

விண்மிசைத் தனதாமமேபுக* மேவிய சோதிதன்தாள்,*
நண்ணிநான் வணங்கப் பெற்றென்* எனக்கு ஆர்பிறர் நாயகரே? 6.4.10

3386:##
நாயகன் முழுவேழுலகுக்குமாய்* முழுவேழுலகும்,* தன்
வாயகம் புக வைத்துமிழ்ந்து* அவையாய் அவையல்லனுமாம்,*
கேசவன் அடியிணை மிசைக்* குருகூர்ச் சடகோபன் சொன்ன*
தூய ஆயிரத்து இப்பத்தால்* பத்தராவர் துவளின்றியே. 6.4.11

ஐந்தாம் திருமொழி

3387:##
துவளில் மாமணி மாடமோங்கு* தொலைவில்லி மங்கலம் தொழும்
இவளை,* நீர் இனி அன்னை மீர்!* உமக்கு ஆசை இல்லை விடுமினோ,*
தவள ஒண்சங்கு சக்கரமென்றும்* தாமரைத் தடங்கணென்றும்,*
குவளை ஒண்மலர்க்கண்கள் நீர்மல்க* நின்று நின்று குமுறுமே. 6.5.1

3388:
குமுறும் ஓசை விழவொலித்* தொலை வில்லி மங்கலம் கொண்டுபுக்கு,*
அமுத மென்மொழியாளை* நீர் உமக்கு ஆசை இன்றி அகற்றினீர்,*
திமிர் கொண்டாலொத்து நிற்கும்* மற்றிவள் தேவ தேவ பிரானென்றே,*
நிமியும் வாயொடு கண்கள் நீர்மல்க* நெக்கொசிந்து கரையுமே. 6.5.2

3389:
கரைகொள் பைம்பொழில் தண்பணைத்* தொலை வில்லி மங்கலம் கொண்டுபுக்கு,*
உரைகொளின் மொழியாளை* நீர் உமக்கு ஆசையின்றி அகற்றினீர்,*
திரைகொள் பௌவத்து சேர்ந்ததும்* திசை ஞாலம் தாவி அளந்ததும்,*
நிரைகள் மேய்த்ததுமே பிதற்றி* நெடுங்கண்ணீர்மல்க நிற்குமே. 6.5.3

3390:
நிற்கும் நான்மறை வாணர் வாழ்* தொலை வில்லி மங்கலம் கண்டபின்,*
அற்க மொன்றும் அறவுருள்* மலிந்தாள் கண்டீர் இவள் அன்னைமீர்,*
கற்கும் கல்வியெல்லாம்* கருங்கடல் வண்ணன் கண்ண பிரானென்றே,*
ஒற்கமொன்றுமிலள் உகந்துகந்து* உள்மகிழ்ந்து குழையுமே. 6.5.4

3391:
குழையும் வாள்முகத்தேழையைத்* தொலை வில்லி மங்கலம் கொண்டுபுக்கு,*
இழைகொள் சோதிச் செந்தாமரைக் கண்பிரான்* இருந்தமைகாட்டினீர்,*
மழை பெய்தாலொக்கும் கண்ண நீரினொடு* அன்று தொட்டும்மையாந்து,* இவள்
நுழையும் சிந்தையள் அன்னைமீர்!* தொழும் அத்திசையுற்று நோக்கியே. 6.5.5

3392:
நோக்கும் பக்கமெல்லாம்* கரும்பொடு செந்நெலோங்கு செந்தாமரை,*
வாய்க்கும் தண்பொருநல்* வடகரை வந்தொலை வில்லி மங்கலம்,*
நோக்குமேல் அத்திசையல்லால்* மறு நோக்கிலள் வைகல் நாள்தொறும்,*
வாய்க்கொள் வாசகமும்* மணிவண்ணன் நாமமே இவள் அன்னைமீர்!6.5.6

3393:
அன்னைமீர்! அணிமாமயில்* சிறு மானிவள் நம்மைக் கைவலிந்து,*
என்ன வார்த்தையும் கேட்குருள்* தொலை வில்லி மங்கலம் என்றல்லால்,*
முன்னம் நோற்ற விதிகொலோ* முகில் வண்ணன் மாயங்கொலோ,* அவன்
சின்னமும் திரு நாமமும்* இவள் வாயனகள் திருந்தவே. 6.5.7

3394:
திருந்து வேதமும் வேள்வியும்* திருமா மகளிரும் தாம்,* மலிந்திருந்து
வாழ்பொருநல்* வடகரை வண்தொலைவில்லி மங்கலம்,*
கருந்தடங்கண்ணிகை தொழுத* அந்நாள் தொடங்கி இந்நாள் தொறும்,*
இருந்திருந்து 'அரவிந்த லோசன!'* என்றேன்றே நைந்திரங்குமே. 6.5.8

3395:
இரங்கி நாள்தொறும் வாய்வெரீஇ * இவள் கண்ண நீர்கள் அலமர,*
மரங்களும் இரங்கும் வகை* 'மணிவண்ணவோ!' என்று கூவுமால்,*
துரங்கம் வாய்பிளந்தான் உறை* தொலை வில்லி மங்கல மென்று,* தன்
கரங்கள் கூப்பித் தொழும்* அவ்வூர்த் திருநாமங் கற்றதற் பின்னையே. 6.5.9

3396:
பின்னை கொல் நிலமாமகள்கொல்?* திருமகள்கொல்? பிறந்திட்டாள்,*
என்னமாயங்கொலோ?* இவள் நெடுமாலென்றே நின்று கூவுமால்,*
முன்னி வந்தவன் நின்றிருந்துறையும்* தொலைவில்லி மங்கலம் சென்னியால் வணங்கும்*
அவ்வூர்த் திருநாமம்* கேட்பது சிந்தையே. 6.5.10

3397:##
சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்* தேவ பிரானையே,*
தந்தை தாயென்றடைந்த* வண்குருகூரவர் சடகோபன்சொல்,*
முந்தை ஆயிரத்துள் இவை* தொலை வில்லி மங்கலத்தைச் சொன்ன,*
செந்தமிழ்பத்தும் வல்லார்* அடிமை செய்வார் திருமாலுக்கே. 6.5.11

ஆறும் திருமொழி

3398:##
மாலுக்கு* வையம் அளந்த மணாளற்கு,*
நீலக் கருநிற* மேக நியாயற்கு,*
கோலச் செந்தாமரைக்* கண்ணற்கு,*
என் கொங்கலரேலக் குழலி* இழந்தது சங்கே. 6.6.1

3399:
சங்கு வில் வாள் தண்டு* சக்கரக் கையற்கு,*
செங்கனி வாய்ச்* செய்ய தாமரை கண்ணற்கு,*
கொங்கலர் தண்ணந் துழாய்* முடியானுக்கு,*
என்மங்கை இழந்தது* மாமை நிறமே. 6.6.2

3400:
நிறங்கரியானுக்கு* நீடுலகுண்ட,*
திறம்கிளர் வாய்ச்* சிறுக் கள்வனவற்கு,*
கறங்கிய சக்கரக்* கையவனுக்கு,* என்
பிறங்கிருங் கூந்தல்* இழந்தது பீடே. 6.6.3

3401:
பீடுடை நான்முகனைப்* படைத்தானுக்கு,*
மாடுடை வையம் அளந்த* மணாளற்கு,*
நாடுடை மன்னர்க்குத்* தூதுசெல் நம்பிக்கு,* என்
பாடுடை அல்குல்* இழந்தது பண்பே. 6.6.4

3402:
பண்புடை வேதம்* பயந்த பரனுக்கு,*
மண்புரை வையம் இடந்த* வராகற்கு,*

தெண்புனல் பள்ளி* எம்தேவ பிரானுக்கு,* என்
கண்புனே கோதை* இழந்தது கற்பே. 6.6.5

3403:
கற்பகக் காவன* நற்பல தோளற்கு,*
பொற்சுடர்க் குன்றன்ன* பூந்தண் முடியற்கு,*
நற்பல தாமரை* நாண்மலர்க் கையற்கு,* என்
விற்புருவக்கொடி* தோற்றது மெய்யே. 6.6.6

3404:
மெய்யமர் பல்கலன்* நன்கணிந்தானுக்கு,*
பையரவின் அணைப்* பள்ளியினானுக்கு,*
கையொடு கால்செய்ய* கண்ண பிரானுக்கு,* என்
தையல் இழந்தது* தன்னுடைச் சாயே. 6.6.7

3405:
சாயக் குருந்தம் ஒசித்த* தமியற்கு,*
மாயச் சகடம் உதைத்த* மணாளற்கு,*
பேயைப் பிணம்படப்* பாலுண் பிரானுக்கு,* என்
வாசக் குழலி* இழந்தது மாண்பே. 6.6.8

3406:
மாண்பமை கோலத்து* எம்மாயக் குறளற்கு,*
சேண்சுடர்க் குன்றன்ன* செஞ்சுடர் மூர்த்திக்கு,*
காண்பெருந் தோற்றத்து* எம்காகுத்த நம்பிக்கு,* என்
பூண்புனே மென்முலே* தோற்றது பொற்பே. 6.6.9

3407:
பொற்பமை நீண்முடிப்* பூந்தண் துழாயற்கு,*
மற்பொரு தோளுடை* மாயப் பிரானுக்கு,*
நிற்பன பல்லுருவாய்* நிற்கு மாயற்கு,* என்
கற்புடையாட்டி* இழந்தது கட்டே. 6.6.10

3408:##
கட்டெழில் சோலே* நல் வேங்கட வாணனே,*
கட்டெழில் தென்குருகூர்ச்* சடகோபன்சொல்,*
கட்டெழில் ஆயிரத்து* இப்பத்தும் வல்லவர்,*
கட்டெழில் வானவர்* போகமுண்பாரே. 6.6.11

ஏழாம் திருமொழி

3409:##
உண்ணுஞ் சோறு பருகுநீர்* தின்னும் வெற்றிலேயும் எல்லாம்
கண்ணன்,* எம்பெருமான் என்றென்றே* கண்கள் நீர்மல்கி,*
மண்ணினுள் அவன்சீர்* வளம்மிக்கவனூர் வினவி,*
திண்ணமென் இளமான் புகுமூர்* திருக்கோளூரே. 6.7.1

3410:
ஊரும் நாடும் உலகமும்* தன்னேப்போல், அவனுடைய*
பேரும் தார்களுமே பிதற்றக்* கற்பு வானிடறி,*
சேரு நல் வளஞ்சேர்* பழனத் திருகோளூர்க்கே,*
போருங்கொல் உரையீர்* கொடியேன்கொடி பூவைகளே! 6.7.2

3411:
பூவை பைங்கிளிகள்* பந்து தூதைபூம் புட்டில்கள்,*
யாவையும் திருமால்* திருநாமங்களே கூவியெழும்,* என்
பாவை போயினித்* தண்பழனத் திருக்கோளூர்க்கே,*
கோவைவாய் துடிப்ப* மழைக் கண்ணொடு என்செய்யுங்கொலோ? 6.7.3

3412:
கொல்லை என்பர்கொலோ* குணம் மிக்கனள் என்பர்கொலோ,*
சில்லைவாய்ப்பெண்டுகள்* அயற் சேரியுள்ளாரும் எல்லே,*
செல்வம் மல்கி அவன் கிடந்த* திருக்கோளூர்க்கே,*
மெல்லிடை நுடங்க* இளமான் செல்ல மேவினளே. 6.7.4

3413:
மேவி நைந்து நைந்து விளையாடலுறாள்* என்சிறுத்-
தேவிபோய்,* இனித்தன் திருமால்* திருக்கோளூரில்,*
பூவியல் பொழிலும்* தடமும் அவன் கோயிலுங்கண்டு,*
ஆவியுள் குளிர* எங்ஙனே உகக்குங்கொல் இன்றே? 6.7.5

3414:
இன்று எனக்கு உதவாதகன்ற* இளமான் இனிப்போய்,*
தென்திசைத் திலதமனைய* திருக்கோளூர்க்கே சென்று,*
தன் திருமால் திருக்கண்ணும்* செவ்வாயும் கண்டு,*
நின்று நின்று நையும்* நெடுங்கண்கள் பனிமல்கவே. 6.7.6

3415:
மல்குநீர் கண்ணொடு* மையலுற்ற மனத்தனளாய்,*
அல்லுநன் பகலும்* நெடுமாலென்றழைத்து இனிப்போய்,*
செல்வம் மல்கி அவன்கிடந்த* திருக்கோளூர்க்கே,*
ஒல்கி ஒல்கி நடந்து* எங்ஙனே புகுங்கொல் ஒசிந்தே? 6.7.7

3416:
ஒசிந்த நுண்ணிடை மேல்* கையை வைத்து நொந்துநொந்து,*
கசிந்த நெஞ்சினளாய்* கண்ண நீர்துளும்பச் செல்லுங்கொல்,*
ஒசிந்த ஒண்மலராள்* கொழுநன் திருக்கோளூர்க்கே,*
கசிந்த நெஞ்சினளாய்* எம்மை நீத்த எம் காரிகையே? 6.7.8

3417:
காரியம் நல்லனகள்* அவை காணில் என் கண்ணனுக்கென்று,*
ஈரியாய் இருப்பாள் இதெல்லாம்* கிடக்க இனிப்போய்,*
சேரி பல்பழி தூயிரைப்பத்* திருக்கோளூர்க்கே,*
நேரிழை நடந்தாள்* எம்மை ஒன்றும் நினைத்திலளே. 6.7.9

3418:
நினைக்கிலேன் தெய்வங்காள்* நெடுங்கண் இளமான் இனிப்போய்,*
அனைத்துலகும் உடைய* அரவிந்த லோசனனை,*
தினைத்தனையும் விடாள்* அவன்சேர் திருக்கோளூர்க்கே,*
மனைக்கு வான்பழியும் நினையாள்* செல்ல வைத்தனளே. 6.7.10

3419:##
வைத்த மாநிதியாம்* மதுசூதனையே அலற்றி,*
கொத்தலர் பொழில்சூழ்* குருகூர்ச் சடகோபன் சொன்ன,*
பத்து நூற்றுள் இப்பத்து* அவன்சேர் திருக்கோளூர்க்கே,*
சித்தம் வைத்துரைப்பார்* திகழ் பொன்னுலகாள்வாரே. 6.7.11

எட்டாம் திருமொழி

3420:##
பொன்னுலகாளீரோ?* புவனி முழுதாளீரோ?,*
நன்னலப் புள்ளினங்காள்!* வினையாட்டியேன் நானிரந்தேன்,*
முன்னுலகங்களெல்லாம் படைத்த* முகில்வண்ணன்கண்ணன்,*
என்னலங் கொண்டபிரான் தனக்கு* என் நிலைமையுரைத்தே? 6.8.1

3421:
மையமர்வாள் நெடுங்கண்* மங்கைமார் முன்பு எங்கையிருந்து,*
நெய்யமர் இன்னடிசில்* நிச்சல் பாலோடு மேவீரோ,*
கையமர் சக்கரத்து* என் கனிவாய்ப் பெருமானைக் கண்டு*
மெய்யமர் காதல்சொல்லிக்* கிளிகாள்! விரைந்தோடி வந்தே? 6.8.2

3422:
ஓடிவந்து என்குழல்மேல்* ஒளிமாமலர் ஊதீரோ,*
கூடிய வண்டினங்காள்!* குருநாடுடை ஐவர்கட்காய்*
ஆடிய மாநெடுந்தேர்ப் படை* நீறெழ செற்றபிரான்,*
சூடிய தண்டுளவமுண்ட* தூமதுவாய்கள்கொண்டே? 6.8.3

3423:
தூமதுவாய்கள் கொண்டுவந்து*என்முல்லைகள்மேல் தும்பிகாள்,*
பூமது உண்ணச்செல்லில்* வினையேனைப் பொய்செய்தகன்ற,*
மாமதுவார் தந்துழாய்முடி*வானவர் கோனைக்கண்டு,*
யாமிதுவோ தக்கவாறு என்னவேண்டும்* கண்டீர் நுங்கட்கே. 6.8.4

3424:
நுங்கட்கு யானுரைக்கேன் வம்மின்*யான்வளர்த்த கிளிகாள்,*
வெங்கண் புள்ளூர்ந்துவந்து* வினையேனை நெஞ்சம் கவர்ந்த,*
செங்கண் கருமுகிலைச்* செய்யவாய்ச் செழுங் கற்பகத்தை,*
எங்குச் சென்றாகிலும் கண்டு* இதுவோ தக்கவாறு என்மினே. 6.8.5

3425:
என் மின்னுநூல் மார்வன்*என்கரும்பெருமான் என்கண்ணன்,*
தன் மன்னு நீள்கழல்மேல்* தந்துழாய் நமக்கன்றிநல்கான்,*
கன்மின்களென்று உம்மையான்* கற்பியாவைத்த மாற்றம்சொல்லி,*
சென்மின்கள் தீவினையேன்* வளர்த்த சிறுபூவைகளே! 6.8.6

3426:
பூவைகள் போல்நிறத்தன்* புண்டரீகங்கள் போலும்கண்ணன்,*
யாவையும் யாவருமாய்* நின்றமாயன் என்னாழிபிரான்,*
மாவைவல் வாய்பிளந்த* மதுசூதற்கு என்மாற்றம்சொல்லி,*
பாவைகள்! தீர்க்கிற்றிரே* வினையாட்டியேன் பாசறவே. 6.8.7

3427:
பாசற வெய்தியின்னே* வினையேன் எனையூழி நைவேன்?,*
ஆசறு தூவிவெள்ளைக்குருகே!*அருள் செய்து ஒருநாள்,*
மாசறு நீலச்சுடர்முடி* வானவர்க்கோனைக் கண்டு,*
ஏசறும் நும்மையல்லால்* மறுநோக்கிலள் பேர்த்துமற்றே. 6.8.8

3428:
பேர்த்து மற்றோர் களைகண்* வினையாட்டியேன் நானொன்றிலேன்,*
நீர்த்திரை மேலுலவி* இரைதேரும் புதாவினங்காள்,*

கார்த்திரள் மாமுகில்போல் கண்ணன்* விண்ணவர் கோனைக்கண்டு,*
வார்த்தைகள் கொண்டருளி உரையீர்* வைகல் வந்திருந்தே. 6.8.9

3429:
வந்திருந்து உம்முடைய* மணிச்சேவலும் நீருமெல்லாம்,*
அந்தர மொன்றுமின்றி* அலர்மேலச் ஐயும் அன்னங்காள்,*
என்திருமார்வற்கு என்னை* இன்னவாறு இவள் காண்மினென்று,*
மந்திரத்து ஒன்றுணர்த்தி உரையீர்*வைகல் மறுமாற்றங்களே. 6.8.10

3430:##
மாற்றங்கள் ஆய்ந்துகொண்டு* மதுசூத பிரானடிமேல்,*
நாற்றங்கொள் பூம்பொழில்சூழ்* குருகூர்ச் சடகோபன் சொன்ன,*
தோற்றங்கள் ஆயிரத்துள்* இவையுமொரு பத்தும்வல்லார்,*
ஊற்றின்கண் நுண்மணல்போல்* உருகாநிற்பர் நீராயே. 6.8.11

ஒன்பதாம் திருமொழி

3431:##
நீராய் நிலனாய்* தீயாய்க் காலாய் நெடுவானாய்,*
சீரார் சுடர்க்கள் இரண்டாய்ச்* சிவனாய் அயனாய்,*
கூரார் ஆழி வெண்சங்கேந்திக்* கொடியேன்பால்
வாராய்,* ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே. 6.9.1

3432:
மண்ணும் விண்ணும் மகிழக்* குறளாய் வலங்காட்டி,*
மண்ணும் விண்ணும் கொண்ட* மாய அம்மானே,*
நண்ணி உனைநான்* கண்டுகந்து கூத்தாட,*
நண்ணி ஒருநாள்* ஞாலத்தூடே நடவாயே. 6.9.2

3433:
ஞாலத் தூடே நடந்தும் நின்றும்* கிடந்திருந்தும்,*
சாலப் பலநாள்* உகந்தோறு உயிர்கள் காப்பானே,*
கோலத் திருமா மகளோடு* உன்னைக் கூடாதே,*
சாலப் பலநாள்* அடியேன் இன்னம் தளர்வேனோ? 6.9.3

3434:
தளர்ந்தும் முறிந்தும்* சகட அசுரர் உடல்வேறு,*
பிளந்து வீயத்* திருக்காலாண்ட பெருமானே,*
கிளர்ந்து பிரமன் சிவன்* இந்திரன் விண்ணவர்சூழ,*
விளங்க ஒருநாள்* காண வாராய் விண்மீதே. 6.9.4

3435:
விண்மீதிருப்பாய்! மலைமேல் நிற்பாய்!* கடல்சேர்ப்பாய்,*
மண்மீதுழல்வாய்!* இவற்றுளெங்கும் மறைந்து உறைவாய்,*
எண்மீதியன்ற புறவண்டத்தாய்!* எனதாவி,*
உண்மீதாடி* உருக்காட்டாதே ஒளிப்பாயோ? 6.9.5

3436:
பாயோர் அடிவைத்து அதன்கீழ்ப்* பரவை நிலமெல்லாம்-
தாய்,* ஓர் அடியால்* எல்லா உலகும் தடவந்த-
மாயோன்,* உன்னைக் காண்பான்* வருந்தி எனைநாளும்,*
தீயோடு உடஞ்சேர் மெழுகாய்* உலகில் திரிவேனோ? 6.9.6

3437:
உலகில் திரியும் கரும கதியாய்* உலகமாய்,*
உலகுக்கே ஓருயிருமானாய்* புறவண்டத்து,*
அலகில் பொலிந்த* திசை பத்தாய அருவேயோ,*
அலகில் பொலிந்த* அறிவிலேனுக்கு அருளாயே. 6.9.7

3438:
அறிவிலேனுக்கு அருளாய்* அறிவாருயிர் ஆனாய்,*
வெறிகொள் சோதி மூர்த்தி!* அடியேன் நெடுமாலே,*
கிறிசெய்து என்னைப் புறத்திட்டு* இன்னம் கெடுப்பாயோ,*
பிறிதொன்றறியா அடியேன்* ஆவி திகைக்கவே? 6.9.8

3439:
ஆவி திகைக்க* ஐவர் குமைக்கும் சிற்றின்பம்,*
பாவியேனைப்* பலநீ காட்டிப் படுப்பாயோ,*
தாவி வையம் கொண்ட* தடன் தாமரைகட்கே,*
கூவிக் கொள்ளும் காலம்* இன்னம் குறுகாதோ? 6.9.9

3440:
குறுகா நீளா* இறுதி கூடா எனையூழி,*
சிறுகா பெருகா* அளவில் இன்பம் சேர்ந்தாலும்,*
மறுகால் இன்றி மாயோன்* உனக்கே யாளாகும்,*
சிறுகாலத்தை உறுமோ* அந்தோ தெரியிலே? 6.9.10

3441:##
தெரிதல் நினைதல்* எண்ணல் ஆகாத் திருமாலுக்கு,*
உரிய தொண்டர் தொண்டர்* தொண்டன் சடகோபன்,*
தெரியச் சொன்ன* ஓராயிரத்துள் இப்பத்தும்*
உரிய தொண்டராக்கும்* உலகம் உண்டாற்கே. 6.9.11

பத்தாம் திருமொழி

3442:##
உலகம் உண்ட பெருவாயா!* உலப்பில் கீர்த்தி அம்மானே,*
நிலவும் சுடர்சூழ் ஒளிமூர்த்தி!* நெடியாய்! அடியேன் ஆருயிரே,*
திலதம் உலகுக்காய் நின்ற* திருவேங்கடத்து எம் பெருமானே,*
குலதொல் அடியேன் உனபாதம்* கூடுமாறு கூறாயே. 6.10.1

3443:
கூறாய் நீறாய் நிலனாகிக்* கொடுவல் அசுரர் குலமெல்லாம்*
சீறா எறியும் திருநேமி வலவா!* தெய்வக் கோமானே,*
சேறார் சுனைத்தாமரை செந்தீ மலரும்* திருவேங்கடத்தானே,*
ஆறா அன்பில் அடியேன்* உன் அடிசேர் வண்ணம் அருளாயே. 6.10.2

3444:
வண்ண மருள்கொள் அணிமேக வண்ணா!* மாய அம்மானே,*
எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே!* இமையோர் அதிபதியே,*
தெண்ணல் அருவி மணிபொன் முத்தலைக்கும்* திருவேங்கடத்தானே,*
அண்ணலே! உன் அடிசேர* அடியேற்கு ஆவா வென்னாயே! 6.10.3

3445:
ஆவா என்னாது உலகத்தை அலைக்கும்* அசுரர் வாணாள்மேல்,*
தீவாய் வாளி மழைபொழிந்த சிலையா!* திருமாமகள் கேள்வா-

தேவா* சுரர்கள் முனிக்கணங்கள் விரும்பும்* திருவேங்கடத்தானே,*
பூவார் கழல்கள் அருவினையேன்* பொருந்துமாறு புணராயே. 6.10.4

3446:
புணரா நின்ற மரமேழ்*அன்றெய்த ஒருவில் வலவாவோ,*
புணரேய் நின்ற மரமிரண்டின்* நடுவே போன முதல்வாவோ,*
திணரார் மேகம் எனக்களிறு சேரும்* திருவேங்கடத்தானே,*
திணரார் சார்ங்கத்து உனபாதம்* சேர்வ தடியே னெந்நாளே? 6.10.5

3447:
'எந்நாளே நாம் மண்ணளந்த* இணைத் தாமரைகள் காண்பதற்கென்று,*
எந்நாளும் நின்று இமையோர்கள் ஏத்தி* இறைஞ்சி இனமினமாய்,*
மெய்ந்நா மனத்தால் வழிபாடு செய்யும்* திருவேங்கடத்தானே,*
மெய்ந்நான் எய்தி எந்நாள்* உன் அடிக்கண் அடியேன் மேவுவதே? 6.10.6

3448:
அடியேன் மேவி அமர்கின்ற அமுதே!* இமையோர் அதிபதியே,*
கொடியா அடுபுள் உடையானே!* கோலக் கனிவாய்ப் பெருமானே,*
செடியார் வினைகள் தீர்மருந்தே!* திருவேங்கடத்து எம்பெருமானே,*
நொடியார் பொழுதும் உனபாதம்* காண நோலா தாற்றேனே. 6.10.7

3449:
நோலாதாற்றேன் உனபாதம்* காண வென்று நுண்ணுணர்வின்,*
நீலார் கண்டத் தம்மானும்* நிறைநான்முகனும் இந்திரனும்,*
சேலேய் கண்ணார் பலர்சூழ விரும்பும்* திருவேங்கடத்தானே,*
மாலாய் மயக்கி அடியேன்பால்* வந்தாய் போலே வாராயே. 6.10.8

3450:
வந்தாய் போலே வாராதாய்!* வாராதாய்போல் வருவானே,*
செந்தாமரைக்கண் செங்கனிவாய்* நால்தோளமுதே! எனதுயிரே,*
சிந்தா மணிகள் பகரல்லைப் பகல்செய்* திருவேங்கடத்தானே,*
அந்தோ! அடியேன் உனபாதம்* அகலகில்லேன் இறையுமே. 6.10.9

3451:##
அகல கில்லேன் இறையும் என்று*அலர்மேல் மங்கை உறைமார்பா,*
நிகரில் புகழாய்! உலகமூன்று உடையாய்!* என்னை ஆள்வானே,*
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும்* திருவேங்கடத்தானே,*
புகல் ஒன்றில்லா அடியேன்* உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே. 6.10.10

3452:##
அடிக்கீழ் அமர்ந்து புகுந்து* அடியீர்! வாழ்மின் என்றென்றருள் கொடுக்கும்*
படிக்கேழ் இல்லாப் பெருமானைப்* பழனக் குருகூர்ச் சடகோபன்,*
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத்* திருவேங்கடத்துக்கு இவைபத்தும்,*
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து* பெரிய வானுள் நிலாவுவரே. 6.10.11